தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயமுத்தூர் - 641 003

முனைவர் ரவி குமார் தியோடர், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (விரிவாக்கம்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12-8-2011

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

<u>ஆகஸ்ட் 2011 மாதத்திற்கான பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாடு</u>

பூச்சி மற்றும் நோய் தாக்குதல் பொருளாதார சேத நிலைக்கு குறைந்தே நெல், கரும்பு, பருத்தி, நிலக்கடலை மற்றும் பயறுவகைப் பயிர்களில் தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. இருந்தாலும், பருவமழை இம்மாதம் குறிப்பிட்ட அளவு பெய்யா விட்டால் நெல், பருத்தி மற்றும் நிலக்கடலை பயிர்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டம் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆதலால், விவசாயிகள் தங்கள் வயல்களில் விளக்குப் பொறி மற்றும் மஞ்சள் ஒட்டும் பொறிகளை வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகள் மற்றும் அந்துப் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறியவும்.

பப்பாளி மாவுப் பூச்சியின் தாக்குதல் பப்பாளி, மரவள்ளி மற்றும் காய்கறிப் பயிர்களில் குறைந்த அளவே காணப்படுகின்றன. விவசாயிகள் விழிப்புணர்வுடன் மாவு பூச்சியின் நடமாட்டத்தை கண்காணிக்கவும். தேவைப்படின் பப்பாளி மாவுப் பூச்சி ஒட்டுண்ணிகளை அருகில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக கல்லூரி அல்லது ஆராய்ச்சி நிலையங்களில் இருந்து இலவசமாக பெற்று உபயோகித்து நடமாட்டத்தை கட்டுப்படுத்தவும்.

மேலும், விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள:

பேராசிரியர் மற்றும் தலைவர்,
வேளாண் பூச்சியியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி: 0422-6611214

பேராசிரியர் மற்றும் தலைவர்,
பயிர் நோயியல் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003
தொலைபேசி: 0422- 6611226

மக்கள் தொடர்பு அலுவலர்